[2010 மே 4

133—

துணை சுகாதார நிலையம்

*104033—திரு. சி. சண்முகவேலு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், பெரியகோட்டை ஊராட்சி, காமராஜர் நகரில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அமைக்கப்படவிருக்கும் 900 துணை சுகாதார நிலையங்களுக்கான நிதியுதவி கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்ட நிலையில், தற்சமயம் பெரியகோட்டை ஊராட்சியைச் சார்ந்த காமராஜர் நகரில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரியகோட்டை ஊராட்சி, காமராஜர் நகரில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அந்தப் பகுதிக்குட்பட்ட ஊராட்சியில் 10,000 population-க்கு அதிகமாக இருக்கிறார்கள். பஞ்சாயத்திலே 20 சென்ட் இடம் போதிய அளவிற்கு இருக்கிறது. யு.கே.பி. நகர், காமராஜர் நகர், மாரியம்மன் நகர், யு.கே.பி. குட்டை, செல்வம் குடியிருப்பு, புஷ்பகிரி வேலன் நகர், சிவலிங்கம் பிள்ளை லே-அவுட், இந்து நகர், செல்வம் நகர், ராஜீவ் நகர் போன்ற பல பகுதிகளை உள்ளடக்கிய நகரப் பகுதியாக இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், சின்ன

2010 மே 4]

வீரப்பன்பட்டி என்ற அந்த இடத்திற்கு 6 கிலோ மீட்டர் தள்ளிப் போக வேண்டியிருக்கிறது. நகரத்திற்கு வரவேண்டுமென்றாலோ, 4 கிலோ மீட்டருக்குத் தள்ளி வர வேண்டியிருக்கிறது. Population அதிகமாக இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்தாவது அந்த இடத்தில் கட்டுவதற்கு இந்த ஆண்டிலேயே உரிய ஏற்பாடு செய்ய முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு அனுமதி கொடுத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, விதிமுறைகளுக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மைய அரசு அனுமதி கிடைத்தால் பரிசீலிக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு பல ஆண்டுகளாக proposal போய், இன்னும் அது வராமலே, கட்டடமே கட்டாமல் இருக்கிறது. ஆகவே, இதற்கு ஏதாவது வாய்ப்பினை நீங்கள் உருவாக்கித் தர வேண்டும். அதோடு, மடத்துக்குளம் தொகுதி என்பது புதிதாக இருக்கிறது. மடத்துக்குளம் வட்டம் மற்றும் தாலுகா புதிதாக இருக்கிறது. அந்த இடத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்த இடத்தில் Government . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சண்முகவேலு, மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறோம், கிடைத்தவுடனே செய்கிறோம் என்று சொல்கிறார், திரும்ப என்ன கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறையில், குத்தாலம் தொகுதியில் பல்வேறு பணிகளை நிறைவேற்றித் தந்திருக்கிற

[2010 மே 4

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குத்தாலம் தொகுதி, திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், ஒன்றியத்தினுடைய கடைசிப் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய காங்கேயம் நகரம் ஊராட்சியில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே கோரிக்கை இருந்து வருகிறது. காங்கேயம் நகரம், ஓலையமங்கலம், ஆலடி கருப்பூர், மேலப்பாலையூர் ஆகிய பல்வேறு ஊராட்சிகளில் இருக்கக்கூடிய 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை பயன்பெறக்கூடிய அந்த ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் எவ்விதமான அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களோ, மருத்துவமனைகளோ குறைந்தது 10 கிலோ மீட்டருக்கு இடையில் இல்லை. இதைச் சென்ற ஆண்டும் கோரிக்கையாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறோம். இந்த ஆண்டும் மனுவாகக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டு அந்தப் பகுதி மக்களினுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய காங்கேயம் நகரத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, விதிமுறைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

134—

மாணவர் விடுதி

***92012—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS